©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 29] சென்னை, புதன்கிழமை, ஜூலை 25, 2012
ஆடி 10, திருவள்ளுவர் ஆண்டு–2043

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை.**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 54, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (H2)த் துறை, நாள்: 21 ஏப்ரல் 2012.]*

1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 68/1986 17B பிரிவின்கீழ், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மாநில ஆணையத்துடன் கலந்தாலோசித்தப் பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் திண்டுக்கல், கன்னியாகுமரி, கரூர், மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள வழக்குகளை பொறுத்தவரையில், அந்த நேரத்தில் மாநில தீர்ப்பாயத்திடம் நிலைபெற்றுள்ள அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளையும் அதிகாரங்களையும் மதுரையிலுள்ள மாநில தீர்ப்பாயம் பெற்றிருக்கும் என இதனால் அறிவிக்கிறார்.

**எம். ப்பி. நிர்மலா,**
*அரசுச் செயலாளர்.*

**ந.அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.**

*[அரசாணை (2டி) எண் 2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 6 ஜனவரி 2012.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழி****ல்* வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும், வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர்–வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை.**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 25–07–2007 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2இல் 265–266ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.ந.வே.வா./391/2007 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழக ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் பொதுப் பொறியியல் மற்றும் கட்டுமான அமைப்புகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார் :—

**விவர அட்டவணை**

**பொது பொறியியல் மற்றும் கட்டுமான அமைப்புகளில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்:* (1) | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* (2) | |
|---|---|---|
| | ரூ. காசு *(i) மண்டலம்–A* | ரூ. காசு *(ii) மண்டலம்–B* |
| | *மாதம் ஒன்றுக்கு* | |
| **I. நிருவாகம்:** | | |
| (1) மேலாளர் | 4,091.00 | 3,940.00 |
| (2) உதவி மேலாளர் | 3,956.00 | 3,813.00 |
| (3) கணக்காளர் | 3,956.00 | 3,813.00 |
| (4) காசாளர்<br>(5) பண்டகக் காப்பாளர்<br>(6) தட்டச்சர் | 3,861.00 | 3,726.00 |
| (7) எழுத்தர் | 3,781.00 | 3,655.00 |
| (8) நேரம் குறிப்பவர்<br>(9) உதவியாள்<br>(10) பாதுகாவலர் | 3,639.00 | 3,520.00 |
| (11) காவலாள்<br>(12) ஏவலாள் | 3,384.00 | 3,282.00 |
| **II மேற்பார்வையிடுதல்:** | | |
| | *மண்டலம்–A* | *மண்டலம்–B* |
| (1) முதலாள் | 4,091.00 | 3,940.00 |
| (2) மேற்பார்வையாளர்<br>(3) பொறுப்பாள் | 3,956.00 | 3,813.00 |
| (4) பணிமனைக் கருவி பராமரிப்பாளர் | 3,639.00 | 3,520.00 |

| | | |
|---|---|---|
| **III தேர்ச்சி பெற்றவர்:** | | *நாளொன்றுக்கு* |
| குறிப்பிட்ட ஒரு தொழிற்பிரிவில் ஐந்து ஆண்டு அனுபவம் அல்லது குறிப்பிட்ட தொழிற்பிரிவில் மூன்று ஆண்டு அனுபவத்துடன், தொழிற்பயிற்சி நிறுவனத்தின் சான்றிதழ் வைத்திருக்கும் நபர்கள். | 139.00 | 135.00 |
| **IV ஓரளவு தேர்ச்சி பெற்றவர்:** | | |
| *(i)* தொழில் பயிற்சி நிறுவனம் உட்பட அனைத்து தொழிற்பிரிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்கள்—(நிலை—I) | 133.00 | 128.00 |
| *(ii)* உதவியாளாக குறிப்பிட்ட ஒரு தொழிற் பிரிவில் இரண்டு வருடங்களுக்கு குறையாமல் பணிபுரிந்தவர்கள் (நிலை—I) | 129.00 | 125.50 |
| **V தேர்ச்சி பெறாதவர்கள்:** | | |
| யாதொரு பயிற்சியும் தேவையில்லாத பணியில் ஈடுபட்டுள்ள நபர்கள் | 123.00 | 120.00 |

**விளக்கங்கள்—**I மண்டலங்களின் வகைபாடு:

*மண்டலம்—A மற்றும் மண்டலம்—B கீழ்க்கண்ட பகுதிகளைக் கொண்டுள்ளது.*

*மண்டலம்—A:* அனைத்து மாவட்ட தலைமையிடங்கள், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்.

*மண்டலம்—B:* ஏனைய இடங்கள்.

II (1) *அகவிலைப்படி:* பணியாளர்களுக்கு கீழே குறிப்பிட்டவாறு அகவிலைப்படி வழங்கப்படும்.

(அ) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்), 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்களொன்றுக்கு கூடுதலாக ரூ. 6.90 (ஆறு ரூபாய் தொண்ணூறு காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்படவேண்டும்.

(ஆ) அகவிலைப்படியானது முந்தைய 12 மாதங்களுக்கான, அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக்கொண்டு, ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(இ) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே வழங்கப்படும் ஊதியத்தில் எவ்விதப் பாகுபாடும் காட்டக்கூடாது.

(3) (a) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(b) மாத ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, நாள், ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.

*[அரசாணை (நிலை) எண் 29, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, நாள்: 22–02–2012.]*

2007 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தின் (தமிழ்நாடு 29/2007) 1ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், 29–02–2012 ஆம் நாள் முதல் மேற்சொன்ன சட்டம் செயலுக்கு வரும் என்று இதனால் அறிவிக்கிறார்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.